www.Padasalai.Net www.TrbTnpsc.com

# SD10-ஆம் வகுப்பு அரையாண்டுத் தேர்வு விடைக் குறிப்பு
## கடலூர் மாவட்டம் 2023 – 24

ம. மரிய அந்துவான்

I. சரியான விடையை தேர்ந்தெடு

1. அ. பிரிட்டன்
2. ஆ. நேட்டோ
3. ஆ) நாகலாபுரம்
4. அ) கோவில் நுழைவு நாள்
5. அ) பணியாளர் தேர்வு வாரியம்
6. அ) காவிரி டெல்டா
7. ஆ) மேல்பட்டு
8. ஆ) சணல்
9. இ) மௌசிம்
10. ஈ) வேம்பநாடு ஏரி (மேற்கு கடற்கரை)
11. ஈ) பாகிஸ்தான்
12. அ) ஒரு முறை
13. அ) 65 வயது
14. ஆ) தர்மபுரி

II. சுருக்கமான விடையளி (ஏதேனும் 10)

ம. மரிய அந்துவான்

**15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா

**16. 2. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத்தீமைகள் யாவை?**

உடன்கட்டை ஏறுதல் (சதி), குழந்தைத் திருமணம், பலதார மணம், விதவைப்பெண்கள் மறுமணம்

**17. ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.**

1919 ஏப்ரல் 13ஆம் நாள் ஜாலியன் வாலா பாக்கில் பொதுக்கூட்டத்துக்கு ஆயிரக்கணக்கான கிராம மக்கள் அங்கு கூடியிருந்தனர்.

ஆயுதமேந்திய வீரர்கள் எந்த முன்னெச்சரிக்கையுமின்றி கண்மூடித்தனமாக சுடத் தொடங்கினார்கள்.

379 பேர் கொல்லப்பட்டனர். 1000-க்கும் மேற்பட்டோர் காயம்.

**18. தங்களுடைய எழுத்துக்களின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்குப் பங்களிப்புச் செய்த ஆளுமைகளைப் பட்டியலிடவும்.**

| | | |
|---|---|---|
| சி.வை. தாமோதரனார் | திரு.வி. கலியாணசுந்தரனார் | உ.வே. சாமிநாதர் |
| பாரதிதாசன் | F. W. எல்லிஸ் | பரிதிமாற் கலைஞர் |
| இராபர்ட் கால்டுவெல் | மறைமலை அடிகள் | பி. சுந்தரனார் |

ilahi high school YouTube
www.Padasalai.Net



Scanned with CamScanner

**19. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?**

மேற்கு ஐரோப்பிய நாடுகளை தன் செல்வாக்கினுள் வைத்துக்கொள் அமெரிக்காவின் திட்டம். இத்திட்டம் இரண்டாம் உலகப்போரின் பாதிப்புகளில் இருந்து மீண்டு வருவதற்கா அமெரிக்க டாலர்களை பயன்படுத்தி கொள்ள வழிவகை செய்தது.

**20. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.**

- மேற்கு – பாகிஸ்தான்
- வடமேற்கு – ஆப்கானிஸ்தான்
- வடக்கு – சீனா, நேபாளம், பூடான்
- கிழக்கு – வங்காளதேசம், மியான்மர்
- தெற்கு – இலங்கை

**21. இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக.**

<u>மேற்கு கடற்கரை</u>

மும்பை ஹை, குஜராத் கடற்கரை, அலியாபெத் எண்ணெய் வயல், காம்பே லூனி பகுதிகள்

<u>கிழக்கு கடற்கரை</u>

பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு(அஸ்ஸாம்), திக்பாய் எண்ணெய் வயல், நாகர்காட்டியா, அந்தமான் நிகோபார்.

**22. 'தேரி' – என்றால் என்ன?**

இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் கடற்கரையோரங்களில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகள் "தேரி" என்று அழைக்கப்படுகின்றன.

**23. தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக.**

| | |
|---|---|
| மேட்டூர் அணை | பவானி சாகர் அணை |
| அமராவதி அணை | கிருஷ்ணகிரி அணை |
| சாத்தனூர் அணை | முல்லைப் பெரியார் அணை |
| வைகை அணை | மணிமுத்தாறு அணை |
| பாபநாசம் அணை | பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் |

**24. வேளாண்மை வரையறு**

பயிர்களை உற்பத்தி செய்தல், மக்களுக்கு உணவு, கால்நடைகளுக்கு தீவனம் வழங்குவது,கால்நடை வளர்த்தல், இந்தியாவின் முதுகெலும்பு.

**25. பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா

**26. அரசியலமைப்பு என்றால் என்ன?**

ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படை கொள்கைகளைச் சார்ந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு ஆகும். ம. மரிய அந்துவான்

**27. . FAO வின்படி உணவு பாதுகாப்பை வரையறு.**

"எல்லா மக்களும், எல்லா நேரங்களிலும், போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல், சமூக மற்றும் பொருளாதார அணுகுமுறையை கொண்டிருக்கும் போது, அவர்களின்

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

உணவுத் தேவைகளையும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் உணவு பாதுகாப்பு இருக்கிறது." (FAO, 2009).

**28. ஆவணங்களின் பாதுகாப்பு பெட்டகம் வரையறு**

உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அனைத்து முடிவுகள் மற்றும் தீர்ப்புகள் அச்சடிக்கப்பட்டு சான்றாதாரமாக பாதுகாக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் எழும் கேள்விகளுக்கு தீர்வாக கடந்த கால தீர்ப்புகள் உதவுகின்றன. உயர் நீதிமன்றம் ஆவணங்களின் பாதுகாப்பு பெட்டகமாக செயல்படுகிறது.

## III விரிவான விடையளி

**29. நிரப்புக**

i. ஜோசப் கோயபெல்ஸ்

ii. நீலகிரி வரையாடு

iii. 15.87 சதவீதம்

iv. உச்ச நீதி மன்றம்

v. நேர்முக வரி

**30. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க**

உலகம் இரு அணிகளாகப் பிரிதல்
அமெரிக்கா, ரஷ்யா
அணு ஆயுதப் பரவல்
ஆயுதங்கள் குவிந்து, இராணுவச் செலவுகள் அதிகரிப்பு
பன்னாட்டு முகமைகள்
ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, பன்னாட்டு நிதியம்
காலனி நீக்கச் செயல்பாடு:-
இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு சுதந்திரம்

ilanji high school YouTube www.Padasalai.Net ம. மரிய அந்துவான்

**31. காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராயவும்.**

<u>தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரகம்</u>
டிரான்ஸ்வாலில் வசித்த இந்தியர்களுக்கு எதிரான நியாமற்ற சட்டங்களை எதிர்த்து அவர் போட்டத்தை தொடங்கினார்.
தென்னாப்பிரிக்காவில் குடியேற்றம் மற்றும் இனவேறுபாடு ஆகிய பிரச்சனைகளுக்காகப் போராட சத்தியாகிரக சோதனைகளை அவர் மேற்கொண்டார்.
<u>இந்தியாவில் காந்தியடிகளின் தொடக்ககால சத்தியாகிரகங்கள்</u>
அரசியலில் ஈடுபடுவதற்கு முன் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் காந்தியடிகள் பயணம் மேற்கொண்டார். இதனால் மக்களின் நிலையை அவர் அறிந்து கொள்ள வழி பிறந்தது.
<u>சம்பரான் சத்தியாகிரகம்</u>
பீகாரில் உள்ள சம்பரானில் தீன்காதியா முறை பின்பற்றப்பட்டது. இருபதில் 3பங்கு அவுரி (இண்டிகோ) பயிரிட கட்டாயப்படுத்தப்பட்டனர். காந்தியடிகள் சம்பரானுக்கு சென்றார். ஆயிரக்கணக்கானோர் அவருக்கு

மரிய அந்துவான்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com
Scanned with CamScanner

ஆதரவாகக் கூடினர். துணைநிலை ஆளுநர் உருவாக்கிய குழுவில் காந்தியடிகள் உறுப்பினராக இருந்து 'தீன் காதியா' முறையை ரத்து செய்ய பரிந்துரைத்தார்.
1918இல் அகமதாபாத் மில் வேலைநிறுத்தம், 1918இல் கேதா சத்தியா கிரகம், 1920 ஒத்துழையாமைஇயக்கம், 1930 சட்ட மறுப்பு இயக்கம், தண்டி யாத்திரை, 1940 தனிநபர் உண்ணாவிரதம், 1942 வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியன காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருவாக்கின.

**32. தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா. பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்.**

சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தார்.
மத பற்றாளராக இருந்து பின் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.
காங்கிரஸ் கட்சியில் பிராமணர்களின் ஆதிக்கத்தை வெறுத்து 1925இல் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார்.

<u>பெரியாரின் பங்களிப்பு</u>

பகுத்தறிவுக் கருத்துகளை மக்களிடையே பரப்புவதில் முக்கிய பங்கு வகித்தார்.
குடிஅரசு (1925), ரிவோல்ட் (1928), புரட்சி (1933), பகுத்தறிவு (1934), விடுதலை (1935) போன்ற பலசெய்தித்தாள்களையும் இதழ்களையும் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தியவர்.
இந்தி எதிர்ப்பு போராட்டம் நடத்தினார்.
ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பல போராட்டங்களை நடத்தினார்
குழந்தைத் திருமணத்தையும் தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார்.
பெண்களுக்குச் சொத்துரிமை, சம உரிமை வேண்டுமென்றார்.
பரம்பரை அர்ச்சகர் முறையை எதிர்த்து அனைத்து நபர்களும் அர்ச்சகர் ஆகலாம் என வாதிட்டவர்
சுயமரியாதை திருமணங்களைப் பரிந்துரைத்து செயல்படுத்தியவர்
சேரன்மகாதேவி குருகுலப் பள்ளியில் நடைபெற்ற சாதி வேறுபாடுகளை களைய முற்பட்டவர்.

**33. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக**

காலம் ஜூன் முதல் செப்டம்பர் வரை
பருவக்காற்று துவக்கம்

இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் (தென் இந்தியாவில்)'பருவமழை வெடிப்பு' எனப்படுகிறது.
இரண்டு கிளைகளாகப் பிரிக்கிறது.

அரபிக்கடல் கிளை

மேற்கு தொடர்ச்சி மலையின் மேற்குச் சரிவுகளில் பலத்த மழை
இமயமலையால் தடுக்கப்பட்டு வட இந்தியா முழுவதும் கனமழையைத் தோற்றுவிக்கிறது.
ஆரவல்லி மலைத்தொடர் இக்காற்று திசைக்கு இணையாக இருப்பதால் இராஜஸ்தான் மற்றும் வட இந்தியாவின் மேற்கு பகுதிக்கு மழைப்பொழிவு இல்லை.

வங்காள விரிகுடா கிளை

வங்காள விரிகுடா கிளை, மேகாலயாவில் உள்ள மௌசின்ராமில் மிக கனமழை
இக்காற்று கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நகரும்போது மழைப் பொழிவின் அளவு குறைந்து கொண்டே செல்கிறது.
இந்தியாவின் 75 சதவீத மழைப் பொழிவானது இப்பருவக்காற்று காலத்தில் கிடைக்கிறது

**34. வேறுபடுத்துக**

Ilahi high School YouTube
www.Padasalai.Net
மரிய அந்துவான்
ம. மரிய அந்துவான்


Scanned with CamScanner

## புதுபிக்க இயலும் வளங்கள் – புதுபிக்க இயலா வளங்கள்

| புதுபிக்க இயலும் வளங்கள் | புதுபிக்க இயலா வளங்கள் |
|---|---|
| புதுபிக்க இயலும் | புதுபிக்க இயலாது |
| நீர், காற்று, சூரியன் | நிலக்கரி, பெட்ரோல் |

## தாமிரபரணி – காவிரி

| தாமிரபரணி | காவிரி |
|---|---|
| பொதிகை மலை முகடில் தோற்றம் | தலைக்காவிரியில் தோற்றம் |
| வற்றாத ஆறு | வற்றும் ஆறு |

**காரணம் கூறுக**

மழைநீர் சேமிப்பு அவசியம்.

நிலத்தடி நீர்மட்டம் உயர, விவசாயம் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்ய மழைநீர் சேமிப்பு அவசியம்.

**35. காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக**

உற்பத்தி

கர்நாடகா மாநிலத்தில் கூர்க் மாவட்டத்திலுள்ள தலைக்காவிரி என்னும் இடத்தில் உற்பத்தியாகிறது.

850 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாய்கிறது.

இதில் சுமார் 416 கிலோ மீட்டர் நீளத்திற்கு தமிழ்நாட்டில் பாய்கிறது.

நீர்வீழ்ச்சி மற்றும் நீர்தேக்கம்

தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் என்னும் இடத்தில் நீர்வீழ்ச்சியை உருவாக்குகிறது. ஸ்டான்லி நீர்த்தேக்கம் என்று அழைக்கப்படும் மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது.

காவிரியின் துணை ஆறுகள்.பவானி ஆறு அமராவதி மற்றும் நொய்யல்

ஸ்ரீரங்கம் தீவு

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இந்த ஆறு இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. வடகிளை கொலேருன் அல்லது கொள்ளிடம் என்றும் தென்கிளை காவிரியாகவும் தொடர்கிறது.

இவ்விரு கிளைகள் இணைந்து 'ஸ்ரீரங்கம் தீவை' உருவாக்குகின்றன.

காவிரி டெல்டா

'கிராண்ட் அணைகட்' என்றழைக்கப்படும் கல்லணை காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.

பின்னர் கடலூருக்கு தெற்கே வங்க கடலில் கலக்கிறது.

**36. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?**

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 78 பிரதம அமைச்சரின் கடமைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

பிரதம அமைச்சர் அமைச்சர்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.

தான் தலைமை வகிக்கும், அமைச்சரவைக் கூட்டத்தின் தேதி, நிகழ்ச்சி நிரல் (Agenda) குறித்து முடிவு செய்வார்.

காபினெட் அமைச்சரவை கூட்டம் நடைபெறாத பொழுது பிரதம அமைச்சர் தனது மூத்த சகாக்கள் இருவர் அல்லது மூவரை இயல்பாகக் கலந்தாலோசிக்கலாம்.

Scanned with CamScanner

பிரதம அமைச்சர் பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.
நடுவண் அரசின் விவகாரங்கள் மற்றும் சட்டத்திற்கான முன்மொழிவுகள் போன்ற அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும் குடியரசுத் தலைவருடன் விவாதிக்கிறார்.
பிரதம அமைச்சர் என்பவர் குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் இடையே பாலமாக செயல்படுகிறார்.
பிரதம அமைச்சர் நாட்டின் உண்மையான தலைவராவார். அவர் நாட்டின் முக்கிய செய்தித் தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
சர்வதேச மாநாடுகளான காமன்வெல்த், அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, சார்க் நாடுகளின் மாநாடு ஆகியவற்றில் இந்திய நாட்டின் பிரதிநிதியாகப் பிரதமர் பங்கு கொள்கிறார்.

**37. இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புகள் குறித்தும் இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் மூன்று உலகளாவிய குழுக்கள் பற்றிய சிறப்பு அம்சங்கள் குறித்தும் எழுதுக.**

| எண் | உலகளாவிய குழுக்களின் பெயர் | உறுப்பு நாடுகள் | குறிக்கோள்கள் |
|---|---|---|---|
| | ஐ.பி.எஸ்.ஏ (IBSQ) | இந்தியா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா | வேளாண்மை, கல்வி ஆற்றல், வணிகம், கலாச்சாரம் மற்றும் பாதுகாப்பில் கவனம். |
| | பி.பி.ஐ.என் (BBIN) | வங்காள தேசம், பூடான், இந்தியா, நேபாளம் | எரிசக்தி ஆற்றலுக்காக |
| | பி.ம்.ஸ்.டெக் (BIMSTEC) | இந்தியா, வங்காள தேசம், மியான்மர், இலங்கை, தாய்லாந்து, பூடான், நேபாளம் | தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சர்வதேச வர்த்தகம், வெளிநாட்டு நேரடி முதலீடு. |

**38. GST யின் அமைப்பை எழுதுக.**

மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (SGST): (மாநிலத்திற்குள்)
மதிப்புக் கூட்டு வரி (VAT), விற்பனை வரி, கொள்முதல் வரி, பொழுதுபோக்கு வரி, ஆடம்பர வரி, பரிசுச்சீட்டு வரி
மாநில கூடுதல் கட்டணம் மற்றும் வரிகள்.
மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (CGST): (மாநிலத்திற்குள்)
மத்திய சுங்கத்தீர்வை, சேவை வரி, ஈடுசெய்வரி, கூடுதல் ஆயத்தீர்வை, கூடுதல் கட்டணம், கல்வி கட்டணம் (இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி வரி). மரிய அந்துவான்
ஒருங்கிணைந்த பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (IGST): (மாநிலங்களுக்கு இடையே)
நான்கு முக்கிய GST விகிதங்கள் உள்ளன. (5%, 12%, 18% மற்றும் 28%)
அத்தியாவசிய தேவைகளுக்கான அனைத்து பண்டங்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன.

**39. பொருளாதார வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இடையே ஏதேனும் ஐந்து வேறுபாடுகளை கூறுக**

Ilahi high school YouTube
www.Padasalai.Net


Scanned with CamScanner

| பொருளாதார வளர்ச்சி பொருளாதார முன்னேற்றம் ஒப்பீடு | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|
| வரையறை / பொருள் | ஒரு குறிப்பிட்டகாலத்தில் பொருளாதாரத்தில் உற்பத்தியில் நேர்மறை அளவு மாற்றத்தைக் கொடுக்கும். | இது பொருளாதாரத்தில் உற்பத்தியில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, HDIயின் குறியீட்டின் முன்னேற்றம் வாழ்க்கைத் தரத்தில் உயர்வு, தொழில் நுட்ப முன்னேற்றம் மற்றும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த மகிழ்ச்சி குறியீட்டைக் குறிக்கிறது. |
| கருத்து | பொருளாதார வளர்ச்சி ஒரு குறுகிய கருத்து | பொருளாதார முன்னேற்றம் ஒரு "பரந்த கருத்து" |
| அணுகுமுறை இயல்பு | அளவின் இயல்பு | தரத்தின் இயல்பு |
| நோக்கம் | GDP, GNP, FDI, FII, போன்ற அளவுகள் அதிகரிக்கும் | சராசரி ஆயுட்காலம், குழந்தை எழுத்தறிவு மற்றும் குழந்தை இறப்பு விகிதம் குறைதல் ஆகியவற்றில் முன்னேற்றம். |
| கால வரம்பு | இயற்கையில் குறுகிய காலத்தை உடையது | இயற்கையில் நீண்ட காலத்தை உடையது |
| பொருந்தும் தன்மை | வளர்ந்த நாடுகள் | வளர்ந்து வருகின்ற நாடுகள் |
| அளவீட்டு நுட்பங்கள் | நாட்டு வருமானத்தை அதிகரித்தல் | உண்மையான நாட்டு வருமானத்தை அதிகரித்தல் அதாவது, தனிநபர் வருமானம் போன்றவை |
| நிகழ்வின் அதிர்வெண் | ஒரு குறிப்பிட்ட காலம் | தொடர்ச்சியான செயல்முறை |
| அரசாங்க உதவி | இது ஒரு தன்னிச்சையான செயல்முறையாகும். எனவே, அரசாங்க உதவி/ ஆதரவு அல்லது தலையீடு தேவைப்படாது | அரசாங்கத்தை சார்ந்துள்ளது. இது பரந்த கொள்கை மாற்றங்களை உள்ளடக்கியுள்ளது. |

**40. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.**

உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.
இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.
இது நெகிழாத்தன்மை மற்றும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.
இந்தியாவைச் சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.
சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்த வித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது. ம. மரிய அந்துவான்

**41. 1900 முதல் 1940 வரையிலான காலக்கோடு**


Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

1. உலக வரலாற்றில் முக்கிய நிகழ்வுகள் (1900 - 1950)

**1900 - 1920**

1910 - தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமாதல்
1912 - முதல் பால்கன் போர்
1914 - முதலாம் உலகப்போர் தொடக்கம்
1917 - ரஷ்யப் புரட்சி
1918 - முதல் உலகப் போர் முடிவு
1919 - பாரிஸ் அமைதி மாநாடு / வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை
1920 - பன்னாட்டு சங்கம் தோற்றம்

**1910 - 1930**

1910 - தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமாதல்
1912 - முதல் பால்கன் போர்
1914 - முதலாம் உலகப்போர் தொடக்கம்
1917 - ரஷ்யப் புரட்சி
1918 - முதல் உலகப் போர் முடிவு
1919 - பாரிஸ் அமைதி மாநாடு / வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை
1920 - பன்னாட்டு சங்கம் தோற்றம்
1922 - முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு
1927 - வியட்நாம் தேசியக்கட்சி உதயம்
1929 - உலகப் பெருமந்தம்

**1920 - 1940**

1920 - பன்னாட்டு சங்கம் தோற்றம்
1922 - முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு
1927 - வியட்நாம் தேசியக்கட்சி உதயம்
1929 - பொருளாதாரப் பெருமந்தம்
1933 - ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் (முக்கிய அமைச்சர்) ஆதல்
1935 - முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தது
1938 - மியூனிச் உடன்படிக்கை
1939 - இரண்டாம் உலகப்போர் தொடக்கம்
1940 - பிரிட்டன் போர்

**43. (a) வேலூரில் 1806இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.**

வேலூர் புரட்சிக்கு முன்பாகவே பல பாளையங்கள் கம்பெனி ஆட்சியுடன் இணைக்கப்பட்டது. மனமுடைந்த சிற்றரசர்கள், நிலச் சுவான்தார்கள் போன்றோர் சிந்தித்து செயல்பட்டதே 1806 ஆம் ஆண்டு வேலூர் புரட்சியாகும்.

பிரிட்டிஷ் இராணுவத்தில் பணியாற்றிய வீரர்களுக்கு குறைவான ஊதியம் மற்றும் பதவி உயர்வும் குறைவாக இருந்தது. மரிய அந்துவான்

சமய நம்பிக்கைகளுக்கு மதிப்பளிக்கவில்லை. அவர்களின் வேளாண் கொள்கை சிக்கலானது.

1805-ம் ஆண்டு கடும் பஞ்சம், நெருக்கடி போன்றவைகள், பிரிட்டிஷ் இராணுவத்தின் புதிய அறிவுரைகள் புதிய ரக துப்பாக்கிகளில் தடவப்பட்ட விலங்குகள் கொழுப்பு மற்றும் தோல் உறைகள்.

குறைகளை சொன்னாலும், கம்பெனி நிர்வாகம் கவனத்தில் கொள்ளாமல் இருந்தது.

1806 ஜூலை 10 அதிகாலையில் நடந்த புரட்சியில் ஆங்கில அதிகாரிகள் கொல்லப்பட்டது. இதற்கு பதிலடி கொடுத்த கர்னல் கில்லஸ்பியின் கொடுங்கோன்மை. இதுவே புரட்சி வெடிக்க காரணம்.

**43. (b) பன்னாட்டுச் சங்கத்தின் அமைப்பு மற்றும் உறுப்புகளை பற்றி விவரி**

1920இல் துவக்கப்பட்ட இச்சங்கம் ஐந்து உறுப்புகளைக் கொண்டிருந்தது. அவை பொதுச்சபை, செயற்குழு, செயலகம், பன்னாட்டு நீதிமன்றம், பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு என்பனவாகும். பன்னாட்டுச் சங்கத்தின் செயலகம் ஜெனீவாவில் அமைந்து இருந்தது. அதன் முதல் பொதுச்செயலாளர் பிரிட்டனைச் சேர்ந்த சர் எரிக் டிரம்மாண்ட் ஆவார். பன்னாட்டு நீதிமன்றமானது தி ஹேக் நகரில் அமைக்கப்பட்டது.


ம. மரிய அந்துவான்

**44. இந்திய வரைபடம்**


Ilahi high School YouTube
www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com




*M.Maria Anthuvan*
*GHS, Kattukudalore*
*Cuddalore Dt.,*
*9443282980*




Mani high school YouTube
www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

A

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## பத்தாம் வகுப்பு

**நேரம் : 3.00 மணி** **சமூகஅறிவியல்** **மதிப்பெண்கள் : 100**

பகுதி - I

சரியான விடையினைத் தேர்ந்தெடுந்து எழுதுக:- 14×1=14

1) பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச் செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

2) அமெரிக்க ஐக்கிய நாடும் அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் சேர்ந்து சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்பைத் தவிர்க்க ஏற்படுத்திய அமைப்பின் பெயர் ______ ஆகும்.
அ) சீட்டோ ஆ) நேட்டோ இ) சென்டோ ஈ) வார்சா ஒப்பந்தம்

3) சிவசுப்பிரமணியனார் எங்கு தூக்கிலிடப்பட்டார்?
அ) கயத்தாறு ஆ) நாகலாபுரம் இ) விருப்பாட்சி ஈ) பாஞ்சாலங்குறிச்சி

4) 1933 ஜனவரி 8 எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது?
அ) கோவில் நுழைவுநாள் ஆ) மீட்பு நாள் (டெலிவரன்ஸ்டே)
இ) நேரடி நடவடிக்கைநாள் ஈ) சுதந்திர பெருநாள்

5) அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்யப் ______ நீதிக்கட்சியால் நிறுவப்பெற்றது.
அ) பணியாளர் தேர்வு வாரியம் ஆ) பொதுப்பணி ஆணையம்
இ) மாநில பணியாளர் ஆளெடுப்பு வாரியம் ஈ) பணியாளர் தேர்வாணையம்

6) தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா ______
அ) காவிரி டெல்டா ஆ) மகாநதி டெல்டா
இ) கோதாவரி டெல்டா ஈ) கிருஷ்ணா டெல்டா

7) ஜவ்வாது மலையின் மிக உயர்மான சிகரம் ______ ஆகும்
அ) சோலைக்கரடு ஆ) மேல்பட்டு இ) வந்தராவ் ஈ) தொட்டபெட்டா

8) இந்தியாவின் தங்க இழைப் பயிர் என அழைக்கப்படுவது ______ ஆகும்
அ) பருத்தி ஆ) சணல் இ) கோதுமை ஈ) புகையிலை

9) மான்சூன் என்ற சொல் ______ என்ற அரபு சொல்லில் இருந்து பெறப்பட்டது
அ) மூசிம் ஆ) மௌஸம் இ) மௌசிம் ஈ) பௌதிம்

10) பொருந்தாதவற்றை எடுத்து எழுது?
அ) சில்கா ஏரி ஆ) பழவேற்காடு ஏரி இ) கொல்லேறு ஏரி ஈ) வேம்பநாடு ஏரி

11) கீழ்கண்டவைகளில் அணிசேரா இயக்கத்தின் நிறுவன உறுப்பினர் அல்லாத நாடு எது?
அ) யூகோஸ்லேவியா ஆ) இந்தோனேஷியா இ) எகிப்து ஈ) பாகிஸ்தான்

12) இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?
அ) ஒரு முறை ஆ) இருமுறை இ) மூன்று முறை ஈ) எப்போதும் இல்லை

13) இந்தியாவில் சராசரி ஆயுட்காலம் ______ ஆண்டுகள்
அ) 65 ஆ) 60 இ) 70 ஈ) 55

14) தவறான ஒன்றினைத் தேர்வு செய்க
பின்வருவனவற்றில் தோல் தொழிற்சாலைகள் இல்லாதது எது?
அ) இராணிப்பேட்டை ஆ) தர்மபுரி இ) ஆம்பூர் ஈ) வாணியம்பாடி

பகுதி - II

**ஏதேனும் 10 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்கவும்.**
**வினா எண். 28க்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.** **10×2=20**

15) மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக.
16) பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகள் யாவை?
17) ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.
18) தங்களுடைய எழுத்துகளின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்கு பங்களிப்பு செய்த ஆளுமைகளை பட்டியலிடவும்.
19) மார்ஷல் திட்டம் என்றால் என்ன?
20) இந்தியாவின் அண்டைநாடுகளின் பெயர்களை கூறுக.
21) இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளை குறிப்பிடுக.
22) தேரி - என்றால் என்ன?
23) தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்கு திட்டங்களின் பெயர்களை எழுதுக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com
Scanned with CamScanner

24) வேளாண்மை - வரையறு

25) பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக.

26) அரசியலமைப்பு என்றால் என்ன?

27) FAOவின்படி உணவு பாதுகாப்பை வரையறு?

28) ஆவணங்களின் பாதுகாப்பு பெட்டகம் - வரையறு

## பகுதி - III

**ஏதேனும் பத்து வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும். 10×5=50**
**வினா எண். 42க்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.**

29) கோடிட்ட இடங்களை நிரப்புக

i) நாசிசக் கட்சியின் பிரச்சாரங்களுக்கு தலைமையேற்றவர் ஜோசப் கோயபெல்ஸ்

ii) புலிகள் தமிழ்நாட்டின் மாநில விலங்கு ஆகும் வரையாடு

iii) தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மைத் துறையின் பங்கு 15.87 சதவீதத்தை வகிக்கிறது

iv) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் உச்சநீதிமன்றம் ஆகும்.

v) நேர்முக வரியில் வரியின் சுமையை மற்றவர்களுக்கு மாற்ற முடியாது

30) இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க

31) காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராயவும்

32) தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வே.ரா. பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்.

33) தென்மேற்கு பருவகாற்று குறித்து எழுதுக.

34) அ) வேறுபடுத்துக.

i) புதுப்பிக்க இயலும் வளங்கள் - புதுப்பிக்க இயலாத வளங்கள்

ii) தாமிரபரணி - காவேரி

ஆ) காரணம் கூறுக: i) மழைநீர் சேமிப்பு அவசியம்

35) காவிரி ஆறு குறித்துத் தொகுத்து எழுதுக.

36) இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?

37) இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புகள் குறித்தும் இந்தியா உறுப்பினராக உள்ள எவையேனும் மூன்று உலகளாவிய குழுக்கள் பற்றிய சிறப்பு அம்சங்களை குறித்து எழுதுக.

38) GST யின் அமைப்பை எழுதுக.

39) பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கம் இடையே ஏதேனும் ஐந்து வேறுபாடுகளை கூறுக.

40) இந்திய அரசியலமைப்பின் சிறப்பு கூறுகளை விளக்குக.

41) கீழ்காண்பவற்றுக்கு காலக்கோடு வரைக.
1900 முதல் 1940 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட ஏதேனும் ஐந்து முக்கிய வரலாற்று நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

42) இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்.
i) டில்லி ii) குவாலியர் iii) ஜான்சி iv) வேதாரண்யம் v) தண்டி

## பகுதி - IV

**குறிப்பு: பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். 2×8=16**

43) அ) i) வேலூரில் 1806ல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.

ii) பன்னாட்டு சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக. (அல்லது)

ஆ) பெண்களின் மேம்பாட்டிற்கு 19ம் நூற்றாண்டுச் சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

44) அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.
i) பாக்நீர்சந்தி ii) மேற்குதொடர்ச்சி மலை iii) கரிசல் மண் iv) காரகோரம்
v) சில்கா ஏரி vi) உலக உயிர்கோள பெட்டகம் (ஏதேனும் ஒன்று)
vii) மகாநதி - ஆறு viii) தேயிலை விளையும் பகுதி (அல்லது)

ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்.
i) மன்னார்வளைகுடா ii) நீலகிரி மலை iii) காவிரி ஆறு
iv) பறவைகள் சரணாலயம் (ஏதேனும் ஒன்று) v) சேலம் vi) சோழமண்டல கடற்கரை
vii) தூத்துக்குடி துறைமுகம் viii) சென்னை - நாகப்பட்டினம் கடல்(நீர்) வழி போக்குவரத்து

****/****

ilahi high school youtube



Scanned with CamScanner